1996 ஆகஸ்ட் 10]

மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே இதற்கான காரணத்தைக் கூறியிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ம. அப்துல் லத்தீப்.

திரு. ம. அப்துல் லத்தீப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்டவர்கள் மதம் மாறுவதனால் அவர்களுக்கு நிரந்தரமாக இருக்கக்கூடிய சமுதாயப் பொருளாதார இயலாமைகள் மாறுவதில்லை. ஆண்டாண்டுக் காலமாக மாறக்கூடிய சூழ்நிலையே இல்லை. எனவே மதம் மாறுவதனால் அவர்களுக்குக் கிடைக்கக் கூடிய சலுகைகளை நாம் நிறுத்தக் கூடாது என்ற அடிப்படையில்தான் மத்திய அரசு கூட ஒரு கொள்கை முடிவு எடுத்திருக்கிறது. ஏற்கெனவே பாராளுமன்றத்தில் இதுகுறித்து ஒரு சட்டமுன்வடிவுகூட சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. அது நிறைவேற முடியாத ஒரு சூழ்நிலையில் கடந்த பாராளுமன்றம் கலைக்கப்பட்டுவிட்டது. எனவே அரசு தன்னுடைய நிலையை அறிவித்து மத்திய அரசுக்கு இதுகுறித்து நடவடிக்கை எடுக்கவேண்டுமென்ற கோரிக்கையை மீண்டும் வலியுறுத்தி தெரிவிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர்களுக்கு உரிய சலுகைகளை மத்திய அரசிலிருந்து பெற்றுத் தரும்வரை அன்புத் தலைவர் கலைஞர் முதல்வராக இருக்கும் அரசு ஓயாது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். விரைந்து இதற்கு நடவடிக்கை எடுக்கும் என்ற நிலையை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

ALONE TRIUMPHS

முற்பகல் 10-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 160, திரு. வி.பி. இராசன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

160--

அய்யனார் கோவில் அருவிப் பகுதியைச் சுற்றுலாத் தலமாக்குதல்

449--*திரு. வி.பி. இராசன்:

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

காமராசர் மாவட்டம், இராசபாளையம் நகருக்கு மேற்கே உள்ள மேற்குத் தொடர்ச்சி மலையில் அய்யனார் கோவில் அருகேயுள்ள அருவியைச் சார்ந்த பகுதிகளைச் சுற்றுலாத் தலமாக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

காமராசர் மாவட்டம், இராசபாளையம் நகருக்கு மேற்கேயுள்ள மேற்குத் தொடர்ச்சி மலையில் அய்யனார் கோவில் அருகேயுள்ள அருவியைச் சார்ந்த பகுதிகளைச் சுற்றுலாத் தலமாக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை என்பதை சபைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கோ. தளபதி.

திரு. கோ. தளபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்குத் தொடர்ச்சி மலையிலுள்ள அய்யனார் கோவில், சதுரகிரி மகாலிங்க சுவாமி கோவில் போன்ற பகுதிகள் இயற்கை எழில் மிகுந்த பகுதிகள் ஆகும். அப்பகுதிகளுக்குச் சாலை அமைத்து, வசதி செய்து கொடுத்தால், மக்களுக்குப் பயன்தரக்கூடிய சுற்றுலாத் தலமாக அமையும் என்பதால் அரசு அதைச் செய்ய முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதி ஆதாரத்தைப் பொறுத்து அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 161, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

161--

ஒகேனக்கல்லை சுற்றுலாத் தலமாக்குதல்

1352--*திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--